**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர் – பாடம் 02

## அபோஸ்தல பொறுப்பை பாதுகாத்தல் (Defending the Apostleship)

**கலாத்தியர் 1:1-5**, 1 மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல,
இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்
தெழுப்பின பிதாவாகிய தேவனாலும்,
அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்,
2 என்னுடனேகூட இருக்கிற சகோதரரெல்லாரும், கலாத்தியா
நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது: 3 பிதாவாகிய
தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்
உண்டாவதாக; 4 அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத
பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய
தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய
பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;
5 அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை
உண்டாவதாக ஆமென்.


அபோஸ்தலராகிய பவுல் எழுதிய நிருபங்களில் பட்டணங்களின் பெயர்களை உடைய எபேசு, பிலிப்பியர், கொலோசே போன்ற 13 பட்டணங்களை போல கலாத்திய என்பது ஒரு பட்டணமோ நகரமோ அல்ல, அது ஒரு நாடு/ பகுதியாகும். அந்தியோகியா (Antioch), லீஸ்திரா (Lystra), இக்கோனியா (Iconium), மற்றும் தெர்பையும் (Derbe) இந்தப் பகுதியில் உள்ளன.

இந்த கலாத்திய பகுதி ஏறத்தாழ 175 மைல் கீழ் 250 மைல் இருக்கும். இக்காலக்கட்டத்தில் இப்பகுதி கிழக்கு துருக்கியில் இருக்கிறது.

அபோஸ்தலராகிய பவுல் பர்ணபாவுடன் (Baranabas) இணைந்து தங்களுடைய முதல் சமயம் பரப்பும் (missionary) பயணத்தின் போது கிழக்கு கலாத்திய பகுதியில் உள்ள இந்த சபைகளை நிறுவினார். அப்போஸ்தலர் 9 ஆம் அதிகாரத்தில் தான் பவுல் இரட்சிக்கப்படுகிறார். பன்னிரண்டாம் அதிகாரத்திற்குள் அவர் தம்மை சமயம் பரப்புபவராக (missionary) ஒப்புக்கொடுத்து இன்னும் சிலருடன் இணைந்து தங்களுடைய சமயம் பரப்பும் பயணத்தை துவங்குகின்றனர். அப்போஸ்தலர் 13 மற்றும் 14 இல் தான் அவர்களுடைய முதல் சமயம் பரப்பும் பயணம் ஆரம்பமாகிறது.

முதல் சமயம் பரப்பும் பயணத்தின் போது பவுல் இந்த அனைத்து இடங்களுக்கும் சென்று நற்செய்தியை பிரசங்கித்து சபைகளை நிறுவினார். இவர்களுக்கு தான் நற்செய்தியை அறிவித்தார். இவர்கள் அவருடைய இதயத்திற்கு நெருங்கியவர்களாக இருந்தனர். அவர் தம்முடைய இரண்டாம் சமயம் பரப்பும் பயணத்தின் போது கலாத்திய பகுதிக்குச் சென்றார். அவர் மீண்டும் தம்முடைய மூன்றாம் சமயம் பரப்பும் பயணத்தின் போதும் கலாத்திய பகுதிக்குச் சென்றார். அவர் அவர்களின் மீது பெரும் முதலீடு செய்திருந்தார்.

யாக்கோபு எழுதிய யாக்கோபு நிருபமே புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட முதல் புத்தகமாகும். இது தான் மிகவும் அடிப்படையான புத்தமும் ஆகும். யாக்கோபு இதனை கி.பி. 48 அல்லது 49இல் எழுதினார். இரட்சிப்பு என்பது உங்களுடைய மாற்றப்பட்ட வாழ்க்கையோடு வெளிப்பட வேண்டும்.




*விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் என்பது தான் யாக்கோபு எழுதிய புத்தகத்தின் முக்கிய ஆய்வுப் பொருள் (theme) ஆகும்.*

*உண்மையான இரட்சிப்பைக் குறித்த விசுவாசம் இருக்குமானால் அது மாற்றமடைந்த வாழ்க்கையின் மூலமும் நீதியுள்ள கிரியைகளின் மூலமும் வெளிகாட்டும். இரட்சிப்பு என்பது பரிசுத்த ஆவியானவரின் பிரசனத்தினால் வாழ்க்கை மாற்றப்பட்டு அது நீதியுள்ள கிரியைகளை உண்டாக்கும்.*

*கிரியை என்பது நம்மை நியாயப்படுத்துவதற்கான ஆதாரம் அல்ல ஆனால் அது நியாயப்படுத்துவதால் பெறப்படும் கனி என்பதையும் யாக்கோபு புத்தகம் தெளிவாக உரைக்கிறது. இது ஒரு புதிய படைப்புக்கு அவசியமான சான்றுகளும் செயல் விளக்கமும் ஆகும்.*

*கலாத்தியர் என்பது புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள 27 புத்தகங்களில் இரண்டாம் புத்தகமாகும் மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய முதல் நிருபமாகும்.*

*ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் உண்மையான இரட்சிப்பை பெற்றிருந்தான் என்றால் நீதிக்குரியவைகள் அவனை பின்தொடரும்.*

*கிரியை இரட்சிப்பை அளிக்காது என்பதை பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் கூறுகிறார். கிரியை ஆதாரப் பொருள் (source) அவை அல்ல. இரட்சிப்பு கிருபையினாலும் விசுவாசத்தினாலும் மாத்திரமே வருகிறது இது கிரியையினால் அல்ல!*

*விசுவாசத்தினால் மட்டுமே நியாயப்படுத்தப்படுகிறோம் (justification) என்ற புதிய ஏற்பாட்டு மைய்ய கோட்பாட்டை கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் பாதுகாக்கிறது. புதிய ஏற்பாட்டின் முதல் நூற்றாண்டின் உண்மையான நற்செய்தியின் பாதுகாப்பு அவசியமானது.*

*கிருபையினாலே இரட்சிப்பை பெறுகிறோம் ஆனால் கிருபையினால் மட்டுமல்ல,*

*விசுவாசத்தினாலே நியாயப்படுத்தப்படுகிறோம் (justification), ஆனால் விசுவாசத்தினால் மட்டுமல்ல கிரியையும் அவசியம், என கலாத்தியப் பகுதியில் உள்ள மக்கள் கூறியதனாலே பவுல் அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதுகிறார்.*

*கலாத்தியருக்கான நிருபம் விசுவாசத்தினால் மட்டுமே நியாயப்படுத்தப்படுகிறோம் (justification) கிரியையினால் அல்ல என்பதற்கான ஆரம்பகால முக்கிய பாதுகாப்பாகும்.*

***அப்போஸ்தலர் 14:19**, பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள்வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன்*

மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள்.

யூதர்கள் அவரைக் கல்லெறியும் அளவிற்கு அவர்கள் அவருடன் மிகவும் கோபமடைந்தார்கள், அவர் நம்பமுடியாத எதிர்ப்பைக் கொண்டிருந்தார்.

பவுலின் மூலோபாயம் (strategy) என்னவென்றால், அவர் புறதேசத்திற்குச் செல்லும் போது யூதருக்கான வழிபாட்டுத் தலத்திற்கு (synagogue) முதலில் போவார். ஏனெனில், ஒரு யூதனாக அவர் ஒரு தொடர்பை வைத்திருந்தார். நற்செய்தியானது முதலில் யூதர்களுக்கும் பின்னர் புறஜாதியினருக்கும் வந்ததால், தேவன் யூதர்களை இரட்சிப்பாரா என்பதை பார்க்க அவர் முதலில் அங்கு செல்வார். பின்னர் அங்கு இரட்சிப்பு பெற்ற சில மக்களை கொண்டு புறஜாதியினரை அடைய முயற்சி செய்வார்.

கலாத்திய சபையில் தவறான போதனையை கூறும் கள்ள போதகர்கள் உள்ளதை அறிந்த பவுல், சீற்றமடைந்தார்! அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக் கூறிக்கொண்டு சபைக்குள் நுழைந்து நற்செய்தியை திரிக்கப் பார்க்கின்றனர்.

தங்களை கிறிஸ்தவர்கள் என கூறிக்கொள்ளும் யூதர்களும் அங்கு இருந்தனர். தாங்கள் விருத்தசேதனம் (circumcision) செய்யாமல் இரட்சிப்பை பெற முடியாது என அவர்கள் நம்பினர். மோசேயின் சடங்குகளை (Mosaic ceremonies) பற்றிக்கொண்டும், ஓய்வு நாளை அனுசரிப்பதும் விசுவாசத்திற்கு அவசியமானது என நம்பினார்கள்.

அவர்கள் இவற்றை கற்றுக்கொடுத்தார்கள்,

- இரட்சிப்பை பெற நீங்கள் விருத்தசேதனம் செய்திருக்க வேண்டும்.

- *மோசேயின் சடங்குகளையும் (Mosaic ceremonies), உணவு சட்டங்கள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் ஆகியவற்றை பின்பற்றுவது புனிதத்துவத்திற்கு அவசியமானவை.*

*அப்போஸ்தலனாகிய பவுல் தேவாலயங்களுக்கு 13 மற்ற கடிதங்களை எழுதினார். இது மட்டும்தான் திருச்சபையை வணக்கம் மற்றும் பாராட்டுதல்* ***(Commendations)*** *எழுதப்படாத ஒரே கடிதமாகும்.*

*அதிகாரம் 1 மற்றும் 2 தம்முடைய அப்போஸ்தல அதிகாரத்தை பாதுகாத்தல்.*

*அதிகாரம் 3 மற்றும் 4, இரட்சிப்பு என்பது கிருபையினால் மட்டுமே பெறக்கூடியது என்பதை நிறுவுதல்.*

*அதிகாரம் 5 மற்றும் 6, நடத்தை என்பது கிருபையினாலே வருவது நியாயப்பிராமனத்தினால் அல்ல என்பதை கிறிஸ்தவர்களுக்கு காண்பித்தல்.*

| | |
|---|---|
| *அதிகாரம் 1&2* | *அப்போஸ்தலனாகிய பவுலின் அதிகாரம்* |
| *அதிகாரம் 3&4* | *கிருபையின் நற்செய்தி* |
| *அதிகாரம் 5&6* | *கிருபையினாலே கிறிஸ்தவன் நடக்கிறான்* |

*கலாத்தியர் என்பது சிறிய புத்தகம். இதில் ஆறு அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. கலாத்தியர் என்ற இந்த நிருபத்தை எழுதி ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு பின்னர் பவுல் ரோமருக்கான நிருபத்தை எழுதினர். கிரியையினால் அல்ல, விசுவாசம் மூலம் கிருபையினால் நியாயப்படுத்துதல் என்ற*

*சுவிசேஷத்தை ரோமருக்கான நிருபத்திலும் பவுல் எழுதியுள்ளார். கலாத்தியர் மற்றும் ரோமருக்கான நிருபம் இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒரு விஷயத்தை கலாத்தியர் சுருக்கமாகவும் ரோமர் நீளமாகவும் சந்திக்கிறது.*

*விடுதலை **(Liberty)** என்பதே இதற்கான முக்கிய ஆய்வுப் பொருள் ஆகும்.*

*கலாத்தியர் முக்கிய விஷயங்களை சந்திக்கிறது!*

- ✓ *நியாயப்பிரமானம்,*
- ✓ *கிருபை,*
- ✓ *கிரியை,*
- ✓ *நற்செய்தி,*
- ✓ *இயேசு கிறிஸ்து,*
- ✓ *பரிசுத்த ஆவி,*
- ✓ *தேவனின் இறப்பு,*
- ✓ *அவருடைய உயிர்த்தெழுதல்,*
- ✓ *இரட்சிப்பு,*
- ✓ *பரிசுத்தமாகுதல் மற்றும்*
- ✓ *விடுதலை*

*கலாத்தியர் என்ற புத்தகத்தின் முக்கிய செய்தி விடுதலை என்பதாகும்!*

- ➢ *பாவத்தில் இருந்து விடுதலை,*

- *நியாயத்தீர்ப்பில் இருந்து விடுதலை,*
- *நரகத்தில் இருந்து விடுதலை,*
- *அனைத்து வகை ஆவிக்குரிய கட்டில் இருந்தும் விடுதலை.*

*ஆறு அதிகாரங்களே கொண்ட இந்த சிறிய நிருபத்தில் சுமார் இருபது முறை "அடிமைத்தனம்" அல்லது "விடுதலை" என்ற வார்த்தை நேரடியாகவோ அல்லது பிற வடிவத்திலோ வருவதை நம்மால் காண இயலும். இந்த புத்தகம் ஆவிக்குரிய விடுதலையை பற்றி கூறுவதாகும்.*

***யோவான் 8:32**, சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்."*

*மதமானது விடுதலையை கொடுக்க விரும்புகிறது. ஒரு மனிதனை பிடித்து வைத்திருத்திருக்கும் துயரம், பிரச்சனை, பயம் போன்றவற்றில் இருந்து விடுதலை செய்து உதவுவதற்காகவே மதமானது கூட வருகிறது. முடிவில் அது அவனை அடிமைத்தனத்திற்கு நேராக நடத்துகிறது*

*எந்த சட்டமும் இல்லாமல் இருக்கும் போது தான் உண்மையான சுதந்திரம் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். கட்டுப்பாடு ஏதும் இல்லாமல் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதனை முற்றிலும் இலவசமாக செய்ய முடிய வேண்டும். அப்போது தான் உங்களால் சுதந்திரத்தை காண முடியும்.*

*சுய-மருப்பானது (Self-denial) உண்மையான சுதந்திரத்தை பெற்றுத் தரும். அதனால் நீங்கள் ஒரு மடத்தில் (monastery) சேரக் கூடும். உங்களுடைய இச்சையை உங்களால் சரியாக அடக்க முடியவில்லையெனில், நீங்கள் உங்களுடைய*

உடம்பில் காயங்களை ஏற்படுத்துவீர்கள். அனேகமாக பொது இடத்திற்கு சென்று உங்களுடைய கண்களை நீங்கள் மூடிக்கொள்ளலாம், அதனால் உங்களால் பொருள்களை காண முடியாமல் போகலாம்.

விடுதலையானது சுய-நம்பிக்கையினால் வருகிறது. சுதந்திரம் என்பது மற்றவர்களின் எதிர்பார்ப்புகளில் இருந்து துண்டிக்கப்படும் போதும் மற்றவர்கள் உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடாது இருக்கும் போதும் வருகிறது. மக்கள் நீண்ட காலம் தனித்து இருக்க விரும்புவதால் இது மிகவும் பிரபலமாக உள்ளது.

சாத்தானால் ஆளப்படும் இருளின் இராஜ்ஜியத்தில் நாம் அனைவரும் பாவத்தால் அடிமைப்படுத்தப்பட்டதாக வேதவசனம் கூறுகிறது. அவன் தான் ஆகாயத்து அதிகாரப் பிரபுவாவான். அவன் நம் அனைவரின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறான்.

நீங்கள் யார் என்பதில் இருந்து உங்களை நீங்கள் எவ்வாறு விடுவித்துக்கொள்கிரீர்கள்?

உங்களுடைய பிரச்சனை உங்களுக்கு வெளியில் இல்லை!

அது உங்களுக்குள் தான் உள்ளது!!

நீங்கள் மாறினால் ஒழிய உங்களால் அதிலிருந்து விடுபட முடியாது!

இயேசு கிறிஸ்துவை குறித்த சுவிசேஷம் மட்டுமே உங்களுக்கு விடுதலையை கொடுக்க முடியும் என பவுல் கலாத்தியருக்கும் நமக்கும் கூறுகிறார்.

உங்களை விடுதலை செய்ய இவ்வுலகில் ஒன்றும் இல்லை.

விடுதலை எங்கே உள்ளது?

***கலாத்தியர் 5:1***, *ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்.*

*இயேசு கிறிஸ்து ஒருவரால் மட்டுமே நம்மை விடுதலையாக்க முடியும்.*

*துன்புறுத்துதல் (Persecution) என்பது ஒன்று வெளியரங்கமாகவோ அல்லது உள்ளரங்கமாகவோ இருக்கலாம். பவுல் இங்கே இந்த துன்புறுத்துதல் (Persecution) உள்ளரங்கமாக இருப்பதை கண்டறிகிறார். பொய் போதகர்கள் திருச்சபைக்குள் புகுந்து, சுவிசேஷத்தைத் திசைதிருப்பும் கிறிஸ்தவர்களாக இருப்பதாக உள்ளனர். அவர்களை கண்டு அவர் மிகவும் ஆக்ரோஷமாக உள்ளார்!*

***கலாத்தியர் 4:17-18***, *[17]அவர்கள் உங்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள், ஆகிலும் நல்மனதோடே அப்படிச் செய்யாமல், நீங்கள் அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டும்பொருட்டு உங்களைப் புறம்பாக்க விரும்பு கிறார்கள். [18]நல்விஷயத்தில் வைராக்கியம் பராட்டுவது நல்லதுதான்; அதை நான் உங்களிடத்தில் இருக்கும் பொழுதுமாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்டவேண்டும்.*

***கலாத்தியர் 6:12-13***, *[12]மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாத படிக்கே உங்களை விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள். [13]விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு*

*நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்கள்.*

***கலாத்தியர் 5:10****, நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.*

*வேறு எந்த ஒரு கருத்தும் இல்லை.*

***கலாத்தியர் 5:6-9****, [6]கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும். [7]நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? [8]இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல. [9]புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.*

*அதனால், அன்பின் மூலம் செயல்படும் விசுவாசம் வேண்டும் என்று பவுல் பதிலளிக்கிறார்.*

***கலாத்தியர் 5:12-13****, [12]உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும். [13]சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.*

*நீங்கள் ஏன் பின் செல்கிறீர்கள்?*

***கலாத்தியர் 4:9-10****, [9]இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க,*

*பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? [10]நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே.*

***கலாத்தியர் 3:1**, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.*

*அபோஸ்தலனாகிய பவுலின் கலாத்திய சபைகளுக்கான இந்த நிருபமானது கிருபையின் நற்செய்திக்கான வலிமையான பாதுகாப்பாகும்.*

*இரட்சிப்பு என்பது கிருபையினால் கிறிஸ்துவின் மீது கொள்ளும் விசுவாசத்தின் மூலமே பெறப்படும் என்ற இந்த நற்செய்தியை யாரேனும் விட்டுக்கொடுக்க எண்ணினால் அவர்கள் வெறுக்கப்படுவதாக என்றும் சபிக்கப்படுவதாக என்றும் பவுல் தம்முடைய அழுத்தமான மொழியை பயன்படுத்துகிறார்.*

## ***ஆசிரியர்: பவுல்***

*வ 1, பவுல், ஒரு அப்போஸ்தலன் (மனிதர்களிடம் இருந்தோ மனிதர்களாலோ அல்ல, ஆனால் மரித்தோரிலிருந்தெழும்பின இயேசு கிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலேயும்),*

*அவர் இதனை மீண்டும் **கலாத்தியர் 5:2**இல் பயன்டுத்துகிறார், இதோ, நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*__கலாத்தியர் 6:11__, <u>என் கையெழுத்தாய்</u> எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள்!*

*கிரேக்க மொழியில் 'பவுலோஸ்' என்ற பெயர் மிகவும் பொதுவான ஒரு பெயராகும்! மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு யூதன் தமஸ்கு சாலையில் பயணித்த போது இயேசுவை ஏற்றுக்கொண்டு இந்த சபை மற்றும் பல சபைகளை நிறுவினார்.*

*அவர் சவுலாக ஆரம்பிக்கிறார்!*

*அப்போஸ்தலர் 7ஆம் அதிகாரத்தில் தான் அவரை குறித்து முதல் முறையாக பார்க்கிறோம். அப்போது அவர் ஸ்தேபானின் (Stephen) மீது கல்லெறிந்து கொல்லுபவர்களின் உடைகளை தம் கைகளில் வைத்திருந்தார். எருசலேமிற்கு நற்செய்தியை பிரசங்கித்தவர் ஸ்தேபான் (Stephen). அதை கண்டு யூதர்கள் சீற்றம் கொண்டு, அவரை கல்லெறிந்து கொல்லத் துவங்கினர். அப்போது அங்கிருந்த ஒரு மனிதன் ஸ்தேபானின் (Stephen) மீது கல்லெறிந்து கொல்லுபவர்களின் உடைகளை தம் கைகளில் வைத்திருந்தார். அவர் வேறு யாரும் இல்லை, சவுல் தான்.*

*யூத குலத்தின் (ஜூடாயிசத்தின்) மீது பவுல் மிகவும் பக்தி வைராக்கியத்தோடு இருந்தார்.*

*__கலாத்தியர் 1:14__, "என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், <u>என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்</u>.*

*அழிப்பதற்கான காரணம்,*

*__கலாத்தியர் 1:13__, "நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக்குறித்துக் கேள்விப்*

*பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி.”*

*இந்த சவுலை தான் நாம் அப்போஸ்தலர் புத்தகத்தின் 8ஆம் அதிகாரத்தில் கண்டோம்.*

*மீண்டும் அவரை அடுத்த அதிகாரத்தில் பார்க்கிறோம்!*

***அப்போஸ்தலர்** 9:1-2,*

*கிறிஸ்தவம் “வழி” என அழைக்கப்பட்டது. ஏனென்றால் இயேசு தாம் தான் வழி எனக் கூறினார்!*

***அப்போஸ்தலர்** 9:3-12,*

*தேவன் அனனியா (Ananias) மற்றும் பவுலிற்கு சந்திப்பை நடத்தக்கோரி தரிசனம் தந்தார்.*

***அப்போஸ்தலர்** 9:13-20,*

*இது ஒரு நம்ப முடியாத அற்புதமாகும்!*

*அத்தகைய தீவிர பரிசேயனாக இருந்த ஒரு மனிதன், தன்னுடைய யூத குலத்தில் (Judaism) மிகவும் மேம்பட்டு இருந்த காரணங்களினாலே கிறிஸ்தவர்களை கொலை செய்தார்.*

*மூன்றே நாட்களில் கொலையாளியாக இருந்ததில் இருந்து அவர் இயேசு கிறிஸ்துவை பற்றிய ஒரு பிரசங்கியாக மாறிவிட்டார்!*

*தேவனால் மட்டுமே, தம்முடைய அளவில்லா சக்தியினால் மட்டுமே, இது முடியும். அதனை நம்முடைய மனித அறிவைக் கொண்டு விளக்க முடியாது.*

***1 தீமோத்தேயு 1:13**, முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனு*

*மாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச்செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்.*

*இந்த பொய்யான போதகர்கள் புறஜாதியாரை யூதர்களாக முத்திரை குத்துவதைப் பற்றி பவுல் எவ்வாறு உணருகிறார்?*

***பிலிப்பியர் 3:1**, மேலும், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள். எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்.*

*அவர் அங்கு பிரசங்கம் பண்ணிக்கொண்டும், தேவாலயங்களை நிறுவிக்கொண்டும், இரவும் பகலும் அவர்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டும் இருந்தார். அவர் அங்கு இருந்தபோது அவர் கூறியதைத் தொடர்ந்து மீண்டும் கூறி அவர்களை காப்பாற்ற முயற்சித்தார்.*

*பவுல் தன்னுடைய சமயம் பரப்பும் (missionary) பயணத்தில் சுவிசேஷத்தை பிரசங்கித்து, மக்கள் இரட்சிக்கப்பட்டு பின் அவர் அவர்களை கொண்டு சபைகளை நிறுவுவார். பிறகு பொய்யான போதகர்கள் இடையூறை கொண்டுவருவார்கள். பவுல் அவர்களிடம் இருந்தபோது தான் சொன்னதை அவர்களுக்கு நினைவுபடுத்தும்படி அவர் அவர்களுக்கு எழுதுவார். உண்மையான சுவிசேஷத்தையும் விசுவாசிகளையும் காப்பாற்ற அவர் அவ்வாறு பிரசங்கித்தார்.*

*எந்த ஒரு உண்மையுள்ள போதகருக்கும் தன்னுடைய ஊழியத்தில் இரண்டு வகையான ஊழியம் உண்டு.*

- *சத்தியத்தை பிரசங்கிப்பது மற்றும்*
- *சத்தியத்தை காப்பாற்றுவது.*

*நாம்,*

- ✓ *மனத்தை கண்டிக்கின்ற வகையில் பிரகடனப்படுத்துவது மேலும்*
- ✓ *சத்தியத்தை தற்காப்பது.*

*பவுல் சத்தியத்தை காக்க விரும்புகிறார். அவர் சத்தியத்தை பிரகடனப் படுத்துவதன் மூலம் அவர் அதனை செய்தார். மேலும், பரிசுத்த ஆவியின் உத்வேகம் மூலம் தன்னுடைய பதின்மூன்று நிருபத்தில் சத்தியத்தை எழுதினார்.*

***பிலிப்பியர் 3:2**, நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்!*

*இதுதான் நீங்கள் யாரைப் பற்றியும் சொல்லக்கூடிய மிக மோசமான விஷயம்.*

*அவர் யாரை பற்றி கூறுகிறார் ?*

*"நாய்களுக்கு ஜாக்கிரதை. கெட்ட தொழில் செய்வோர்களிடம் இருந்து ஜாக்கிரதையாக இருங்கள்."*

*அவர் யாரை பற்றி கூறுகிறார் ?*

*"தப்பான விருத்தசேதனத்தை" குறித்து நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்."*

*சபைகளுக்குள் தவறான போதகர்கள் நுழைந்து*

- ➢ *கிருபையும் விசுவாசமும் போதாது,*
- ➢ *கிரியை செய்திருக்க வேண்டும்*
- ➢ *நீங்கள் விருத்தசேதனம் செய்திருக்க வேண்டும்.*
- ➢ *மோசே விழாவின் பரிந்துரைகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும்.*

***பிலிப்பியர்*** *3:3-9,* [3]*ஏனெனில்,* *மாம்சத்தின்மேல்*
*நம்பிக்கையாயிராமல்,* *ஆவியினாலே* *தேவனுக்கு*
*ஆராதனைசெய்து,* *கிறிஸ்து* *இயேசுவுக்குள்* *மேன்மை*
*பாராட்டுகிற* *நாமே* *விருத்தசேதனமுள்ளவர்கள்.*
[4]*மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும்*
*வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கை*
*யாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.*
[5]*நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்,*
*இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான்,*
*எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி*
*பரிசேயன்;* [6]*பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்*
*படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி*
*குற்றஞ்சாட்டப்படாதவன்.* [7]*ஆகிலும், எனக்கு லாபமாயிருந்*
*தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு*
*நஷ்டமென்று எண்ணினேன்.* [8]*அதுமாத்திரமல்ல, என்*
*கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின்*
*மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று*
*எண்ணிக்கொண்டிருக்கிறேன்.* [9]*நான் கிறிஸ்துவை*
*ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்*
*பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல்,*
*கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும்*
*விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை*
*உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று*
*காணப்படும்படிக்கும்;*

*தவறான சுவிசேஷங்களை கற்பிப்பவர்களை அம்பலப்படுத்துவதன் மூலம் உண்மையான சுவிசேஷத்தைப் பாதுகாப்பது என்பதில் பவுல் நிலையாக உள்ளார்.*

*பவுல் தீத்துவிற்கு தம்முடைய கடைசிக்கு முந்தைய நிருபத்தை எழுதுகிறார்.*

***தீத்து 1:10-11***, [10]*அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக் காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். [11]அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்.*

*அவர்கள் பணத்திற்காக உள்ளனர்.*

***தீத்து 1:16***, *அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்.*

- ✓ *வெறுக்கத்தக்க,*
- ✓ *கீழ்படியாது,*
- ✓ *பயனற்ற,*
- ✓ *கலகமூட்டி,*
- ✓ *காலி பேச்சாளர்கள், மற்றும்*
- ✓ *ஏமாற்றுபவர்கள்*

*இந்த அனைத்து பாத்திரங்களையும் நிசப்தமாக்க வேண்டும்.*

*யாரேனும் வந்து இரட்சிப்பு என்பது வெறும் கிருபையினாலும் விசுவாசித்தினாலும் என்பதோடு எதையேனும் சேர்த்தால் அவர்களை அச்சுறத்தலாக கருத வேண்டும்.*

*பவுலின் ஊழியம் ஒரு பக்கம் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை குறித்து பிரசங்கிப்பதாக இருந்தாலும், மற்றொரு பக்கத்தில் தவறான கோட்பாட்டை எச்சரிப்பதும் மற்றும் தாக்குவதாகும்.*

*அவர் மூன்று நீண்ட மதிப்புள்ள ஆண்டுகள் இரவும் பகலும் எபேசுவில் கழித்த பிறகு அவர்களை விட்டு வெளியேறிய போது அவர் எபேசுவில் உள்ள மூப்பர்களிடம் சொன்னார்.*

***அப்போஸ்தலர் 20:29-31***, *[29]நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.*
*[30]உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப் பார்களென்று அறிந்திருக்கிறேன்.*
*[31]ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்.*

*அதனால், கலாத்தியர் தான் பவுலின் முதல் புத்தகமாகும். தவறான சுவிசேஷங்களுக்கு எதிராக இது ஒரு விமர்சனமாகும். அவர் எழுதிய மற்ற புத்தகங்களை போலவே இதுவும் உண்மையில் கடுமையானது. ஏனென்றால்,*

- ✓ *அவர் தவறை கண்டிக்க வேண்டும்,*
- ✓ *சத்தியத்தை பாதுகாக்க வேண்டும்*

*என்ற எண்ணத்தில் எழுதியுள்ளார்.*